1974 மார்ச் 29]

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரி மண்ணெண்ணெய் போன்றவற்றை அதிக விலைக்கு விற்கும்போது அவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. யார் யார் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற லிஸ்டை எடுத்து அதை பிளாக் லிஸ்டாக அறிவிக்க வேண்டும் ; அவர்களுக்கு மறுபடியும் லைசென்ஸ் கொடுக்கக் கூடாது. இந்த முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : அநேகமாக அவர்களுடைய பெயர்கள் வெளியிடப்படுகின்றன. நிச்சயமாக மீண்டும் லைசென்ஸ் கொடுக்கப்படமாட்டாது.

திரு. கே. என். குமாரசாமி : பதுக்கல்காரர்கள் மீது கேஸ் போட்டால் யாருக்கும் தெரிவதில்லை. யார் சமூக விரோதிகள், பதுக்கல்காரர்கள் என்று கண்டு பிடித்து அவர்களுடைய பெயர்களையும், படங்களையும் வால்போஸ்டர் மூலம் விளம்பரப்படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : இனிமேல் அதுபற்றி முயற்சி எடுக்கப்படும்.

திரு. எ. சி. நரசிம்மன் : இந்த மாதிரி வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுத்து லைசென்ஸை ரத்து செய்த பிறகு அவர்கள் பெயரால் இல்லாமல் அவர்களுடைய சொந்தக்காரர்கள் பெயரால் லைசென்ஸ் பெற்றிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா ? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : சொல்லப்படுகிறது என்று சொல்லுவதை விட இன்னார் என்று தெரிவித்தால் விளக்கம் கூற முடியும்.

Murugan Temple at Pazhamudir Solai.

*683 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether there are proposals under consideration to construct a Murugan Temple at Pazhamudir Solai near Madurai ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) இந்து சமய அறக்கட்டளை (நிர்வாகத்) துறை ஆணையாளர் இக்கோவிலின் வடிவமைப்பைத் தயாரிப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார். வடிவமைப்பு முடிவாகத் தயாரிக்கப்பட்ட பிறகு விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்படும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : இந்த முருகன் கோயிலின் சிறப்பு பற்றி அமைச்சர் அவர்கள் ஏதாவது சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : முருகனுக்குள்ள சிறப்புத்தான் கோயிலுக்கும்.

திரு. ந. சோமசுந்தரம் : தமிழ்நாட்டில் ஏற்கெனவே கட்டியிருக்கும் கோயில்களுக்கே திருப்பணி செய்ய முடியாது சீரழிந்து இருக்கும் நிலையில் இப்போது புதிய கோயில் கட்ட வேண்டியது அவசியந்தானா என்று அரசு மறு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அவசியம் என்று மக்களில் ஒரு பகுதியினர் கருதுகிறார்கள்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : பழமுதிர்ச் சோலையில் ஏற்கெனவே ஒரு கோயில் இருக்கிறது. அதற்குத் திருப்பணி செய்ய திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டதாக அறிகிறேன். அதற்கு அறநிலையம் அங்கிகாரம் கொடுத்திருக்கிறதா ? திருப்பணியை மேற்கொள்வது அந்தக் குழுவா அல்லது அறநிலையமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கெனவே சில சட்டச் சிக்கல்கள் இருந்த காரணத்தால் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டிருந்தும் இதுவரை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. சட்டச் சிக்கல்கள் தற்போது நீக்கப்பட்டு அறநிலையத் துறையே அந்த வேலையை எடுத்துச் செய்ய இருக்கிறதே அல்லாமல் யாருடைய தலைமையிலும் குழு அமைக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(திருமதி ஜோதி வெங்கடாசலம்—தலைமை.)

2. பேரவைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திருமதி ஜோதி வெங்கடாசலம்) : அடுத்து பேரவைத் தலைவரை பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம் முன் மொழியப்பட்டு விவாதிக்கப்பட வேண்டும்.

ஐந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக் கிறார்கள். ஒருவர் அதை முன்மொழிய வேண்டும். பின்னர் வழி மொழியப்பட வேண்டும். பின்னர் விவாதம் நடக்கும். பேரவைத் தலைவர் பற்றிய விவாதமாக இருப்பதால் விவாதம் உயர்ந்த முறையில்